செய்தி வெளியீடு எண்:582 நாள்:12.12.2016

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

இன்று (12.12.2016) சென்னை மாநகரத்தில், ஆவின் வழக்கமாக விற்பனை செய்யும் அளவான 11.49 இலட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது, இதில் 7.56 இலட்சம் லிட்டர் 132 விற்பனை வழித்தடங்கள் மூலமாகவும், மீதமுள்ள 3.93 இலட்சம் லிட்டர் பால் மொத்த விற்பனை முகவர்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இன்று சென்னை மாநகரில் எப்பொழும் போல் பால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதை தவிர நாள் முழுவதும் சென்னையில் உள்ள அனைத்து ஆவின் பாலகங்களில் கூடுதலாக பால் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாதவரம், அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பால் பண்ணைகளை தடையின்றி இயக்க தேவையான ஜெனரேட்டர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆவின் நாளை (13.12.2016) காலை 11.50 இலட்சம் லிட்டர் பாலை நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏதேனும் இடையுறு ஏற்பட்டால் நுகர்வோர்கள் கட்டணமில்லா தொலைபேசி எண் 18004253300 – ஐ தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.